22nd March 1961]

பஞ்சாயத்தில் தலையிடமுடியவில்லை என்றால், விவசாய சங்கத்திலாவது தலையிடலாமா என்று திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர் எண்ணுகிறார்களா என்பது தெரியவில்லை.

Sri N. MARUDACHALAM : பஞ்சாயத்து ஏரியாவுக்கு ரூ. 2 லட்சம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். பின்தங்கிய பஞ்சாயத்து ஏரியாவுக்கு அதிகமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் ஆலோசிக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பின்தங்கிய பஞ்சாயத்துளுக்கு வேறு வகையிலே அதிக மான்யம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Bridge across Pazhavarn (Thiruppanandal-Narasingampettai Road)

*988 *Q.*—**Sri T. R. RAMAMIRTHA THONDAMAN :** கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருப்பனந்தாள்—நரசிங்கம்பேட்டை சாலையில் (வயா) திருலோக்கிருரியமூலை பழவாற்றிற்கு பாலம் கட்டி கப்பிபோட திட்டம் உண்டா ? எப்போது அவ்வேலை ஆரம்பிக்கப்படும் ?

The Hon. Sri P. KAKKAN : Both metalling the road and construction of bridge have not been included in any approved programme at present.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இந்த திருப்பனந்தாள் நரசிங்கம்பேட்டை (வயா) திருலோக்கிருரியமூலை ரோடு நீண்ட நாளாக மண் ரோடாகவே இருந்து, ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் ரோடாக இருக்கிறது. இந்த மூன்றாவது திட்டத்திலாவது, முதலாவதாக இந்த ரோட்டைப் போட்டு படிவாத்துரை பாலத்தையும் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : அந்த ரோடு போட இப்பொழுது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கனம் அங்கத்தினர் சொல்லுவதால் மீண்டும் பரிசீலனை செய்து அதைச் செய்ய முன்வரலாம்.

Rural Development Department (expenditure)

*989 *Q.*—Sri T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total expenditure by the State Government under the Rural Development Department for the last two years (1958-59 and 1959–60);

(*b*) the total expenditure for the salaries of officers and contingencies; travelling allowances and dearness allowances, rents and stationery for the last two years; and

(*c*) the percentage of expenditure on salaries and travelling allowance and dearness allowance to the total expenditure?

The Hon. Sri C. SUBRAMANIAM :

(*a*) 1958–59.	RS.
Community Development, National Extention Service, Local Development Works and Training Centres.	3,00,28,912
Loans	1,39,49,052
Total ..	4,39,77,964